# Middle French Immersion

## Middle French Immersion என்றால் என்ன?

Middle French Immersion என்பது பிரெஞ்சு மொழியை ஓர் இரண்டாம் மொழியாகத் தீவிரமாகக் கற்குமொரு திட்டமாகும். இந்தத் திட்டம் தரம் 4இல் ஆரம்பிக்கிறது. Middle French Immersion திட்டத்திற்கான மாதிரிக் கற்பித்தல் 4ம் மற்றும் 5 ஆம் தரங்களில் 100% பிரெஞ்சு மொழியிலான அறிவுறுத்தலாக இருக்கிறது. தரங்கள் 4 மற்றும் 5 இல் நிகழும் வகுப்புச் செயற்பாடுகள் யாவும் பிரெஞ்சு மொழியிலேயே நடத்தப்படுகின்றன. பிரெஞ்சு மொழியிலான அறிவுறுத்தலின் மாதிரி தரங்கள் 6 முதல் 8 வரை, 75% பிரெஞ்சு மொழியில் அமைந்திருக்கிறது. ஆங்கில மொழி மற்றும் விஞ்ஞானம் தவிர்ந்த பாடங்கள் அனைத்தும் பிரெஞ்சு மொழியில் கற்பிக்கப்படுகின்றன. நேரசூசிகை அமைப்பதில் ஏதும் பிரச்சினைகள் இருப்பின், சிறப்புப் பாடங்கள் (உ+ம். சுகாதாரம் மற்றும் உடற்கல்வி) ஆங்கிலத்தில் கற்பிக்கப்படக்கூடும்.

## Middle French Immersion எவருக்காக ?

- ✔ பிரெஞ்சு மொழி தவிர்ந்த வேறொரு மொழியை வீட்டில் பேசும் குடும்பத்தவர்களுக்காக இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.
- ✔ தரம் 3இல் ஆங்கிலமொழியிலான கல்வித் திட்டத்தில் இருக்கும் அனைத்து மாணவர்களும் தரம் 4இல் இதனை ஆரம்பிப்பதற்கு விண்ணப்பிக்க முடியும்.
- ✔ மாணவர்கள் அனைவரும் பிறிதொரு மொழியைக் கற்க வல்லவர்கள் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம், ஆதலால், சகல விதமான கற்றல் முறை மற்றும் மொழிப் பின்னணி உள்ள அனைத்து மாணவர்களும் இந்தத் திட்டத்துக்கு வரவேற்கப்படுகிறார்கள், அத்துடன் ஆதரவளிக்கப்படுகிறார்கள்.
- ✔ Middle French Immersion திட்டம், பிரெஞ்சு மொழியில் தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பில் ஆர்வமுள்ள குடும்பத்தவர்களுக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது, அத்துடன் பிரெஞ்சு மொழியிலான ஆரம்பகாலக் கல்விக்கான நுழைவுப் புள்ளியின் பின்னர் TDSBக்கு இடம்மாறியவர்களுக்கும் இது பொருந்தலாம்.
- ✔ அவர்களுடைய பிள்ளை கொஞ்சம் வயதானவராக இருந்தாலும், ஏதாவது காரணங்களுக்காகப் பிரெஞ்சு மொழி மூலமான கல்வியைத் தெரிந்தெடுக்க விரும்புபவர்களுக்கும் இது பொருத்தமானது.

## Middle Immersion Program இன் நன்மைகள்

மாணவர் எந்த மொழியைப் பின்புலமாகக் கொண்டிருந்தாலும், பிரெஞ்சு மொழியில் அவர்கள் உயர் மட்டத் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு Middle French Immersion program உதவிசெய்கிறது. இன்னொரு மொழியை இந்த வழியில் படிப்பது பின்வருவன உள்ளடங்கலான பல நன்மைகளையும் மாணவர்களுக்கு வழங்குகிறது:

- ✔ வேறொரு மொழியிலான கற்றல் மாணவர்களின் முதன்மை மொழியில் அவர்களின் திறன்களை மேம்படுத்துவது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.
- ✔ அவர்களின் கற்கையில் சகல பகுதிகளுக்கும் மாணவர்கள் பிரயோகிக்கவேண்டிய மேம்பட்ட சிந்தனைத் திறன் மற்றும் கற்றல் திறன் போன்ற அறிவாற்றலுடன் தொடர்பான ஏனைய நன்மைகளை மொழிக் கற்கை வழங்குகிறது.
- ✔ ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் இருக்கும் தேர்ச்சி, எதிர்காலத்தில் மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களை அதிகமாக்குகிறது.
- ✔ இருமொழிகளில் கற்றும் மாணவர்கள் வலுவான தொடர்பாடல் திறன்களை ஒட்டுமொத்தமாக வளர்த்துக் கொள்கிறார்கள், அத்துடன் இன்னொரு மொழியையும் அவர்கள் மிகவும் இலகுவாகக் கற்கக்கூடும்.

## விண்ணப்பம் பற்றிய தகவல்கள்

Middle French Immersion திட்டம் மற்றும் விண்ணப்பிக்கும் முறை பற்றிய தகவல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.tdsb.on.ca/French.

ஒவ்வொரு ஆண்டும், Middle French Immersion திட்டத்துக்கு விண்ணப்பிக்கும் காலம் தற்போது **ஜனவரி** ஆக இருக்கிறது. குறிப்பிட்ட ஆண்டிற்கான விண்ணப்பக் காலக்கெடு தொடர்பான தகவல்களுக்குத் தயவுசெய்து வலைத்தளத்தை செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் பார்வையிடுங்கள்.

தகுதிவாய்ந்த இணைய விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் திட்டத்தில் இடம் வழங்கப்படுவது உறுதிசெய்யப்படும். இருப்பினும். குறிப்பிட்டதொரு பாடசாலையில் இடம் கிடைக்குமென உத்தரவாதம் **கிடைக்கமாட்டாது**.

# ஆய்வு என்ன சொல்கிறது?

“கற்றலைப் பொறுத்தளவில், ஒரு மொழிமூலமான “தீவிரக் கற்றல்” அதே அளவை நீண்ட காலத்திற்குப் பரவலாகக் கற்பதிலும் பார்க்க பொதுவில் மிகவும் வினைத்திறன் வாய்ந்ததாக இருக்கிறது.” (Weshce, 2002)

பிரெஞ்சு மொழியிலான கற்றல் திட்டங்களில் சேர்ந்திருக்கும் மாணவர்களின் வாசிப்புத் திறன் அந்தத் திட்டத்தில் இல்லாத அவர்களின் சகாக்களை விடச் சிறப்பாக இருப்பதைத் தரவுகள் காட்டுகின்றன. https://www150.statcan.gc.ca/n1/daily-quotidien/040322/dq040322a-eng.htm

"FI இல் உள்ள மாணவர்கள் பிரெஞ்சு மொழியில் மேம்பட்ட தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளையில், இதே உள்ளடக்கத்தை ஆங்கிலத்தில் படிக்கும் மாணவர்களுக்கு சமமான தேர்ச்சியையும் (விஞ்ஞானம், சமூகவியல், கணிதம் போன்றவை) பெற்றுக்கொள்கிறார்கள்.“ (Wesche, 2002)

கனடாவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், ஆங்கில மொழியில் பரீட்சிக்கப்பட்டபோதும், EFI அல்லது MFI ஆரம்பப் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூகவியல் பாடங்களை பிரெஞ்சு மொழியில் பயின்ற மாணவர்களின் அடைவுகளில் எதிர்மறையான விளைவுகள் எதுவுமிருக்கவில்லை என்பதைக் கண்டறிந்திருக்கின்றன. (Wesche, 2002)

ஒரு பிள்ளையின் முதல் மொழி, சமூகரீதியான ஒரு மொழியாக இருக்காவிட்டாலும்கூட, ஆங்கிலத்தை ஓர் இரண்டாம் மொழியாகக் கற்கும் அதேவேளையில், பிரெஞ்சு மொழி போன்ற இன்னொரு மேலதிக மொழியையும் அவரால் வெற்றிகரமாகக் கற்றுக்கொள்ள முடியும். (O’Brien, 2017)

சாத்தியமான வேலைவழங்குநர்கள் இரண்டாம் மொழி தெரிந்திருப்பதைப் பெரும்பாலும் பெறுமதிமிக்கதெனக் கருதுவதுடன் அப்படித் தெரிந்திருக்கவேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றார்கள். (O’Brien, 2017)

50% பிரெஞ்சு மொழியிலான கல்வித் திட்டத்தை 80 வீதமான திட்டத்துடன் ஒப்பிடும் ஆய்வொன்று, பிரெஞ்சு மொழியிலான கற்பித்தல் திட்டத்தில், கணிதத்தைப் பிரெஞ்சு மொழியில் கற்பிப்பதன் மூலம் பிரெஞ்சு மொழிக் கல்வியின் தீவிரத்தை அதிகரிப்பது கணித்திலான அடைவுகளில் நேர்மறையான பாதிப்பை ஏற்படுத்துவதுடன் வலுவாகத் தொடர்புடையது என்பதைக் கண்டறிந்துள்ளது. (Bournot-Trites & Reader, 2001)

**உசாத் துணை நூல்கள்**

Bournot-Trites & Reader (2001) Interdependence Revisited: Mathematics Achievement in an Intensified French Immersion program, Canadian Modern Languages Review (58/1) September.

Wesche, M.B. (2002) Early French Immersion: How has the original Canadian model stood the test of time? An Integrated View of Language Development, Petra Burmeister, Thorsten Piske, and Andreas Rohde (Eds), WVT Wissenschaftlicher Verlag Trier www.fmks-online.de/_wd_showdoc.php?pic=865.

Statistics Canada, (2004) Student Reading Performance in Minority Language Schools. https://www150.statcan.gc.ca/n1/daily-quotidien/040322/dq040322a-eng.htm

O’Brien (2017) Literature Review on the Impact of Second Language Learning, Canadian Association of Second Language Teachers https://www.caslt.org/files/pd/resources/research/Lit-review-Impact-L2-Learning-Exec-Summary.pdf